**நகராட்சி அலுவலகம்**

**போடிநாயக்கனூர்**

**நாள்:02.12.2025**

**அவசர கூட்ட அழைப்பிதழ்**

2025 **ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்** 04.12.2025-**ஆம் தேதி வியாழக்கிழமை காலை** 11.30 **மணிக்கு** நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :** **திருமதி ச.ராஜராஜேஸ்வரி,**
**நகர்மன்ற தலைவர்.**

***********

**பொருள்கள்**

1) அரசாணை (நிலை) எண்.119, நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.26.06.2025-இன் படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரநிதித்துவம் அளிக்கும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, திரு.கே.பாக்கியராஜ் த/பெ மகாலிங்கம், வார்டு எண்-32, என்பவர் போடிநாயக்கனூர் நகராட்சியில் மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினராக 26.11.2025-ஆம் நாள் பதவியேற்பு உறுதிமொழி எடுக்கப்பட்டுள்ளது. என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.2601/2021/எப்-2)

**தீர்மான எண்.**936 பதிவுசெய்யப்பட்டது.

2)நகராட்சி நிர்வாக இயக்குநர சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26987/2025/எச்3, நாள்.20.09.2025-இன் படி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்ட நாள்.06.11.2025 அறிவுரைகளின்படியும், போடிநாயக்கனூர் நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர மற்றும் தற்காலிக தூய்மை பணியாளர்கள் 282 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மை பணியாளர்களுக்கான காலை உணவுத்திட்டத்தில் உணவு வழங்க அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் அரசாணை (4ப) எண்.56, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள்.21.11.2025 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.29143/2025/எச்3, நாள்.22.11.2025-ஆம் தேதிய அரசாணை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்நகராட்சி நிரந்தர மற்றும் தனியார் தூய்மை பணியாளர்கள், DBC பணியாளர்கள், அனைத்து பள்ளிகளிலும் உள்ள கழிப்பறைகளை தூய்மை செய்யும் தூய்மை பணியாளர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடக்கூடிய ஓட்டுநர்களுக்கு தினந்தோறும் ஒருவேளை உணவு வழங்குவதற்கான செலவினம் என ஒட்டு மொத்தமாக ஏற்படும் முதலாம் ஆண்டு செலவினத்துடன் 5% ஏற்றம் செய்து இரண்டாம் ஆண்டிலும், இரண்டாம் ஆண்டின் ஒட்டு மொத்த செலவினத்துடன் 5% ஏற்றம் செய்து மூன்றாம் ஆண்டிலும் செலவினம் மேற்கொள்ள நிர்ணயம் செய்யப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அதன்படி போடிநாயக்கனூர் நகராட்சிக்கு 282 தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவுத்திட்டம் செயல்முறைப்படுத்த மூன்றாண்டுக்கான உணவு மற்றும் வாகனச்செலவு உட்பட செலவினத்தொகை ரூ.1,56,04,572 /- ஆகும்.

மேற்காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி, போடிநாயக்கனூர் நகராட்சியில் பணிபுரியும் 282 தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு காலை உணவுத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக இரண்டு டிபன் பாக்ஸ்கள் (தலா ரூ.295/-விலையில்) மற்றும் உணவு வழங்கும் பை (தலா ரூ.190/-விலையில்) வாங்குவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பொருட்கள்விவரம் | எண்ணிக்கை (ம) விலைவிபரம் | மொத்ததொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | இரண்டு டிபன் பாக்ஸ்கள் | (295x2x282) | 1,66,380/- |
| 2 | உணவு வழங்கும் பை | (190x2x282) | 1,07,160/- |
| | | **மொத்தம்** | **2,73,540/-** |

மேற்காணும் பணி 282 பணியாளர்களுக்கு காலை உணவுத்திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் பணியை மேற்கொள்ள 25.11.2025-ஆம் தேதியன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்

| வ.எண் | ஒப்பந்ததாரரின்பெயர்(ம) முகவரி |
|---|---|
| 1 | M/s Peoples Kitchen,<br>6/187/1D, Muthunagar,<br>Vellalore ,Coimbatore – 641 111 |
| 2 | M/s, AI Enterprises.<br>No 80A,Sudha Illam.Sarswathi nagar kovipudur<br>Coimbatore – 641 111 |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் கூர்ந்தாய்வு செய்ததில் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின்பெயர்(ம) முகவரி | விலைவிகிதம் ரூபாயில் (முதல்வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | M/s Peoples Kitchen,<br>6/187/1D, Muthunagar,<br>Vellalore ,<br>Coimbatore – 641 111 | Rs.49,49,904/-(Including GST) |

அலுவலகக்குறிப்பு-

1)மன்றம்பதிவுசெய்யலாம்.

2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து செலவு செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்காணும் ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s Peoples Kitchen, கோயம்புத்தூர் நிறுவனத்தினரை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.**937 அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3) இந்நகராட்சி சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN60 Q5418 வாகனத்திற்கு பழுது பணிகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.48.000/- பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 2441/2025/இ1**

**தீர்மான எண்.**938 அனுமதிக்கப்பட்டது.

4) இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தில் தூய்மைப்பணிகள் செய்ய ஒப்பந்த முறையில் 7 பணியாளர்கள் ஈடுப்படுத்தப்படுவதற்கு கடந்த 01.12.2024 முதல் 30.11..2025 முடிய ஒருவருட காலத்திற்கு பணியை செய்ய உத்தரவிடப்பட்டது. தற்போது வருகின்ற 30.11.2025ம் தேதியுடன் முடிவடைவதால் 01.12.2025 முதல் 30.11.2026 வரை மேலும் ஓராண்டு காலத்திற்கு ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிறுவனமான சங்கர் இன்ஜினியரிங்- சென்னை நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள நிபந்தனைகளின்படி பணி நீட்டிப்பு செய்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண் :2815 / 2013/24 / எச்1 )**

**தீர்மான எண்.**939 அனுமதிக்கப்பட்டது.

5) இந்நகராட்சி பகுதியில் அரசுமருத்துவமனை வளாகத்தில் இயங்கிவரும் நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்கான விடுதியினை கடந்த 20.11.2024ம் தேதி முதல் மதுரை சுரபி அரக்கட்டளைக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பராமரிப்பு செய்யப்பட்டுவருகிறது. மேற்கண்ட பணி உத்தரவு காலமானது 19.11.2025-ல் நிறைவு பெற்றுள்ளது. கடந்த ஓராண்டு காலமாக சுரபி அரக்கட்டளை செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்து வருவதாலும் ஏற்கனவே வழங்கப்பட்ட நிபந்தனைகள் அடிப்படையில் 20.11.2025 முதல் ஒராண்டு காலத்திற்கு சுரபி அரக்கட்டளை மதுரை நிறுவனத்திற்கு பணி உத்தரவினை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண் : 1065/ 2013/ 24 / எச்1 )**

**தீர்மான எண்.**940 அனுமதிக்கப்பட்டது.

6) போடிநாயக்கனூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு 2025-2026 ம் ஆண்டிற்குத் தேவையான நுண் உரம் தயாரக்க தேவையான EM SOLUCTION -(first grad ) -150 லிட்டர் மற்றும் கிருமிநாசினி- லெமன் கிராஸ் ஆயில்-(first grade) 150 லிட்டர் விநியோகம் செய்திட கடந்த 30.09.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது அவை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பொருட்களின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் முகவரி | விலை விகிதம் ஒரு கிலோவிற்கு |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு நுண் உரம் தயாரக்க தேவையான EM SOLUCTION -(first grad )-150 லிட்டர் விநியோகம் செய்தல் மற்றும் இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்குத் தேவையான கிருமிநாசினி- லெமன் கிராஸ் ஆயில்-(first grade) 150 லிட்டர் விநியோகம் செய்தல் | ஸ்ரீ தாய் மூகாம்பிகா எக்ஸ்போட், பூங்காநகர், சூலி ஸ்வரன்பட்டி, பொள்ளாட்சி | EM SOLUCTION -1 litre ரூ-1200/-+GST 18%<br>LEMON GRASS OIL -1 litre ரூ-2540/- +GST 18% |
| 2 | | ஸ்ரீபாலாஜீமார்க்கெட்டிங், எக்ஸ்போர்ட்,பஜார் தெரு, | EM SOLUCTION –1 litre |

| | | | |
|---|---|---|---|
| | | அய்யம்பாளையம் | ரூ-1300/- + GST 18%<br>LEMONGRASSOIL -1 litre<br>ரூ-2650/- + GST18% |

**அலுவலக குறிப்பு :** குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ தாய் மூகாம்பிகா எக்ஸ்போட், பூங்கா நகர், சூலிஸ்வரன்பட்டி, பொள்ளாட்சி, அவர்களின் ஒப்பந்தத்தினை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1204/2023-2025/எச்-2)**

**தீர்மான எண்.**941 அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்
போடிநாயக்கனூர் நகராட்சி

// உண்மைநகல் //

ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி